**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.244/2022 –** P.W.12

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : மருத்துவர் திரு. ராதாகிருஷ்ணன் | Father's Name. அண்ணாமலை |
| Village : திருவள்ளூர் | Age: 40 |
| Date :09.07.2026 | தொழில் : மருத்துவர் |

நம்பர்: 9930166960

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th **day of July 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamakeswari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th **day of July 2026.**

Signature of Interpreter

**( 2, 3, 4, 6, மற்றும் 7 ஆகிய எதிரிகள் ஆஜர். 1, 5 மற்றும் 8 ஆகிய எதிரிகள் ஆஜரில்லை. அவர்களுக்காக அவர்களது தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜராக அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்த குவிமுச.பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்போது, திருவள்ளூரில் இந்திரா மருத்துவ கல்லூரி என்ற தனியார் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சமூக மருத்துவதுறையில் இணை பேராசிரியராக பணிபுரிந்துவருகிறேன். நான் கடந்த 19.10.2021ம் தேதி அன்று

நாகப்பட்டினம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணி மருத்துவராக இருந்தபொழுது, அன்று இரவு 11.00 மணியளவில் நாகப்பட்டினம், அந்தனப்பேட்டை கீழதெருவை சேர்ந்த மணவாளன் மகன் சுமார் 21 வயதுடைய மணிபிரகாசம் என்பவரை அவரது சகோதரர் கார்த்திக் என்பவர் சிகிச்சைக்கா அழைத்துவந்திருந்தார். நான் அவரை பார்வையிட்டு பரிசோதனை செய்தேன். அப்போது அவர் சுயநினைவோடும், பேசக்கூடிய நல்ல மனநிலையிலும் இருந்தார். அவர் என்னிடத்தில் தன்னை அடையாளம் தெரிந்த 6 நபர்கள் கடந்த 19.10.2021ம் தேதி இரவு 10.30 மணியளவில் நாகப்பட்டினம் புதிய பேருந்து நிலையத்தில் வைத்து அருவாள், பட்டா கத்தி ஆகியவைகளை வைத்து தாக்கியதாக கூறினார்.

நான் அவரை பரிசோதித்தப்போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது

1. வலது முன் கையில் சுமார் 7 x 4 cm அளவில் ஓர் கிழிந்த காயம்
2. வலது முன்கையில் 6 x 2 cm அளவில் ஓர் கிழிந்த காயம்
3. வலது முன்கையில் 6 x 1 cm அளவில் ஓர் கிழிந்த காயம்
4. முன் நெற்றியில் 7 x 1 cm அளவில் ஓர் கிழிந்த காயம்
5. வலது பக்க கழுத்தில் 2 x 1 cm அளவில் ஓர் கிழிந்த காயம்

மேற்கண்ட காயங்களை பார்வையிட்டு அவரை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதித்து முதலுதவி சிகிச்சை அளித்தேன். அவருக்கு இரத்தபோக்கு இருந்ததால் மேல் சிகிச்சைக்காகவும், இரத்த நால நிபுணரின் ஆலோசனைக்காகவும். தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். அவர் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்ததற்காக விபத்து பதிவேட்டு ஆவணம் வழங்கினேன். அந்த விபத்து

பதிவேட்டு ஆவணம்தான் தற்போது காட்டப்படுவது. அந்த விபத்து பதிவேட்டு ஆவணம் **அதசாஆ.3**.

அன்றே இரவு 11.05 மணியளவில் மேற்படி சம்பவத்தில் காயமுற்றதாக சொல்லி மேற்படி முகவரியை சார்ந்த சக்கரைதேவர் மகன் மணவாளன் என்பவரை அவரது பேரன் கார்த்திக் என்பவர் சிகிச்சைக்காக அழைத்துவந்திருந்தார். நான் அவரை பார்வையிட்டு பரிசோதனை செய்தேன். அப்போது அவர் சுயநினைவோடும், பேசக்கூடிய நல்ல மனநிலையிலும் இருந்தார். அவர் என்னிடத்தில் தன்னை அடையாளம் தெரிந்த 6 நபர்கள் கடந்த 19.10.2021ம் தேதி இரவு 10.30 மணியளவில் நாகப்பட்டினம் புதிய பேருந்து நிலையத்தில் வைத்து அருவாள், பட்டா கத்தி ஆகியவைகளை வைத்து தாக்கியதாக கூறினார்.

நான் அவரை பரிசோதித்தப்போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது

1. இடது கையில் சுமார் 7 x 3 cm அளவில் ஓர் கிழிந்த காயம்
2. இடது தோள்பட்டையில் 7 x 3 cm அளவில் ஓர் கிழிந்த காயம்
3. இடது கையில் 4 x 2 cm அளவில் ஓர் கிழிந்த காயம்
4. இடது உள்ளங்கையில் 7 x 2 cm அளவில் ஓர் வெட்டு காயம்
5. முன் நெற்றியில் இடது பக்கத்தில் 3 x 2 cm அளவில் ஓர் கிழிந்த காயம்

மேற்கண்ட காயங்களை பார்வையிட்டு அவரை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதித்து முதலுதவி சிகிச்சை அளித்தேன். அவர் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்ததற்காக விபத்து பதிவேட்டு ஆவணம் வழங்கினேன். அந்த விபத்து பதிவேட்டு ஆவணம்தான் தற்போது காட்டப்படுவது. அந்த விபத்து பதிவேட்டு ஆவணம் **அதசாஆ.4**.

கடந்த 19.10.2021ம் தேதி சிகிச்சைக்கு ஆஜரான மேற்படி மணவாளன் கடந்த 20.10.2021ம் தேதி வரை சிகிச்சையில் இருந்தவர் மருத்துவ அறிவுறத்தலின்றி வெளியேறிவிட்டதால் அவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து கருத்து தெரிவிக்க இயலாதுஎன காயம் குறித்த கருத்துரை ஆவணத்தை வழங்கினேன். அந்த ஆவணம்தான் தற்போது காட்டப்படுவது. அந்த காயம் குறித்த கருத்துரை ஆவணம் **ஆதசாஆ.5**.

நான் பார்வையிட்ட காயங்களானது அவர்கள் என்னிடம் கூறியதுபோல, சொல்லப்பட்ட நேரத்தில், சொல்லப்பட்ட ஆயுதங்களால் தாக்கிய பொழுது ஏற்படவாய்புள்ளது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**.

போலிசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் ஆமாம். என்னை நேரடியாக விசாரணை செய்தார்களா அல்லதுதொலை பேசி மூலம் விசாரணை செய்தார்களா என்றால் நேரடியாக விசாரணை செய்தார்கள். என்னுடைய குவிசமுச பிரிவு 161(3) படியான வாக்குமூலத்தில் என்னை போலிசார் போன் மூலமாகத்தான் விசாரணை செய்ததாகவும், அப்போது காயம் குறித்து கருத்துரை ஆவணம் வழங்கியதாகவும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் நீண்ட நாட்கள் ஆனதால் எனக்கு ஞாபகம் இல்லை.

போலிசார் என்னிடம் ஏதேனும் ஆயுதங்களை காட்டி, அதை வைத்து தாக்கினால் நான் பார்வையிட்ட மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்று

விசாரித்தார்களா என்றால் இல்லை. என்னிடம் சிகிச்சைக்கு ஆஜரான மேற்படி இரண்டு நபர்களுமே, தங்களை தெரிந்த 6 நபர்கள் தாக்கியதாகத்தான் கூறியுள்ளார்கள் என்றும், அதை தான் நான் வழங்கிய ஆதசாஆ.3 மற்றும் 4கான விபத்து பதிவேட்டு ஆவணங்களிலும் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். பொதுவாக குற்ற வழக்குகள் சம்மந்தமாக காயம் பட்ட நபர்கள் எங்களிடம் சிகிச்சைக்கு ஆஜராகும் பொழுது, அவர்கள் தங்களை தாக்கிய நபர்களை பற்றி பெயர் விபரங்களையும், உறவு முறையையும் சொல்லும் பொழுது அதனை நாங்கள் வழங்கும் விபத்து பதிவேட்டு ஆவணங்களில் பதிவு செய்வோமா என்றால் பதிவு செய்வோம், ஆனால் நான் வழங்கிய அதசாஆ.3 மற்றும் 4கான விபத்து பதிவேட்டு ஆவணங்களில் மேற்படி காயம் பட்டதாக சொல்லப்படும் நபர்கள், என்னிடம் அவர்களை தாக்கியவர்களின் பெயர் விபரங்களையும், தங்களுக்கான உறவு முறைகளையும் சொல்லாததால் அதை நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

காயம்பட்ட நபர்கள் இருவரையும், அன்று இரவே மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துவிட்டோமா என்றால் இல்லை. மணிபிரகாஷ் என்பவரை மட்டும் அனுப்பிவைத்தேன். மணவாளன் எங்களது மருத்துவமனையில் இருந்து மருத்துவ அறிவுறுத்தலின்றி தன்னிச்சையாக தலைமறைவாகிவிட்டதால் அவருக்கான காயம் குறித்து கருத்துரையை நான் வழங்கவில்லை. நான் வழங்கிய அதசாஆ.5தான காயம் குறித்த கருத்துரை ஆவணத்தில் மணவாளனுக்கு ஏற்பட்ட காயம் குறித்து கருத்துரை வழங்க இயலாது எனதான் சொல்லியுள்ளேன். ஆனால் என்னை விசாரணை செய்து போலிசார் பதிவு செய்ததாக சொல்லப்படும் என்னுடைய குவிமுச பிரிவு 161(3)ன் படியான வாக்குமூலத்தில் நான் மேற்படி மணவாளனுக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயங்கள் என கருத்துரை வழங்கியதாக சொன்னதாக குறிப்பிடப்பட்டுள்ளது

என்று சொன்னால் சரிதான். என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றும், அவர்களாகவே என்னை விசாரணை செய்ததுபோல குவிமுச பிரிவு 161(3)ன் படியான வாக்குமுலம் உருவாக்கி கொண்டதால்தான் எனது சாட்சியத்திற்கு எதிராகவும், நான் வழங்கிய மருத்துவ ஆவணத்திற்கு எதிராகவும், மேற்படி வாக்குமூலம் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

நான் சிகிச்சை அளித்த நபர்கள், என்னிடம் சொன்னதுபோல அவர்களை 6 நபர்கள் அருவாள் மற்றும் பட்டா கத்தியால் வேகமாக தாக்கும் பொழுது நான் பார்வையிட்ட காயங்களைவிட பலமான காயங்கள்தான் ஏற்பட வாய்பிள்ளை என்றால் சரிதான். ஆனால் தாக்கப்படும் விசை, இடைவெளி ஆகியவைகளை பொறுத்து காயங்கள் மாறுபட வாய்ப்புள்ளது. மணிபிரகாசுக்கு ஏற்பட்ட காயங்கள் மழுங்களான பொருட்களால் தாக்கப்படும்பொழுது ஏற்பட்ட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.09 16:00:25 +0530